## பொய்கையாழ்வார் அருளிச் செய்த
# முதல் திருவந்தாதி

---

## முதல் திருவந்தாதி தனியன்

### முதலியாண்டான் அருளிச் செய்தது

கைதை சேர் பூம்பொழில் சூழ் கச்சி நகர் வந்துதித்த *
பொய்கைப் பிரான் கவிஞர் போரேறு * - வையத்து
அடியவர்கள் வாழ அருந்தமிழ் நூற்றந்தாதி[1] *
படிவிளங்கச் செய்தான் பரிந்து

---

## பொய்கையாழ்வார் அருளிச் செய்த
# முதல் திருவந்தாதி

2082 * வையம் தகளியா * வார்கடலே நெய்யாக *
வெய்ய கதிரோன் விளக்காக ** - செய்ய
சுடர் ஆழியான் அடிக்கே * சூட்டினேன் சொல் மாலை *
இடராழி நீங்குகவே[2] என்று 1

2083 என்று கடல் கடைந்தது? * எவ்வுலகம் நீரேற்றது? *
ஒன்றும் அதனை உணரேன் நான் ** - அன்று அது
அடைத்து உடைத்து * கண் படுத்த ஆழி * இது நீ
படைத்து இடந்து உண்டு உமிழ்ந்த பார் 2

2084 பாரளவும் ஓரடி வைத்து * ஓரடியும் பாருடுத்த *
நீரளவும் செல்ல நிமிர்ந்ததே ** - சூருருவின்
பேயளவு கண்ட * பெருமான்! அறிகிலேன் *
நீயளவு கண்ட நெறி 3

2085 நெறி வாசல் தானேயாய் நின்றானை * ஐந்து
பொறி வாசல் * போர்க்கதவம்[3] சார்த்தி ** - அறிவானாம்
ஆலமர நீழல் * அறம் நால்வர்க்கு அன்று உரைத்த *
ஆலம் அமர் கண்டத்தரன் 4

2086 அரன் நாரணன் நாமம் * ஆன்விடை புள்ளூர்தி *

---

[1] அந்தாதி
[2] நீங்கவே
[3] போர்கதவம்

உரை நூல் மறை உறையும் கோயில் ** - வரை நீர்
கருமம் அழிப்பு அளிப்புக் * கையது வேல் நேமி *
உருவம் எரி கார் மேனி ஒன்று 5

2087 ஒன்றும் மறந்தறியேன் * ஓத நீர் வண்ணனை நான் *
இன்று மறப்பனோ? ஏழைகாள்! ** - அன்று
கருவரங்கத்துள் கிடந்து * கை தொழுதேன் கண்டேன் *
திருவரங்க மேயான் திசை 6

2088 திசையும் * திசையுறு தெய்வமும் * தெய்வத்து
இசையும் * கருமங்கள் எல்லாம் ** - அசைவில் சீர்க்
கண்ணன் நெடுமால் * கடல் கடைந்த * காரோத
வண்ணன் படைத்த மயக்கு 7

2089 மயங்க வலம்புரி வாய் வைத்து * வானத்து
இயங்கும் * எறிகதிரோன் தன்னை ** - முயங்கு அமருள்
தேராழியால் மறைத்தது * என்? நீ திருமாலே! *
போராழிக் கையால் பொருது 8

2090 பொருகோட்டோர் ஏனமாய்ப் * புக்கிடந்தாய்க்கு * அன்று உன்
ஒரு கோட்டின் மேல் கிடந்ததன்றே ** - விரிதோட்ட
சேவடியை நீட்டித் * திசை நடுங்க விண் துளங்க *
மாவடிவின் நீ அளந்த மண் 9

2091 மண்ணும் மலையும் * மறிகடலும் மாருதமும் *
விண்ணும் விழுங்கியது மெய் என்பர் ** - எண்ணில்
அலகளவு கண்ட * சீராழியாய்க்கு * அன்று இவ்
வுலகளவும் உண்டோ? உன் வாய் 10

2092 வாய் அவனை அல்லது * வாழ்த்தாது * கை உலகம்
தாயவனை அல்லது * தாம் தொழா ** - பேய் முலை நஞ்சு
ஊணாக உண்டான் * உருவொடு பேர் அல்லால் *
காணா கண் கேளா செவி 11

2093 செவி வாய் கண் மூக்கு * உடல் என்று ஐம்புலனும் * செந்தீ
புவி கால் * நீர் விண் பூதம் ஐந்தும் ** - அவியாத
ஞானமும் வேள்வியும் * நல் அறமும் என்பரே *
ஏனமாய் நின்றாற்கு இயல்வு 12

2094 இயல்வாக * ஈந்துழாயான் அடிக்கே செல்ல *
முயல்வார் இயல் அமரர் முன்னம் ** - இயல்வாக
நீதியாலோதி * நியமங்களால் பரவ *
ஆதியாய் நின்றார் அவர் 13

2095 அவரவர் தாம் தாம் * அறிந்தவாறு ஏத்தி *
இவரிவர் எம்பெருமான் என்று ** - சுவர் மிசைச்
சார்த்தியும் * வைத்தும் தொழுவர் * உலகளந்த
மூர்த்தி உருவே முதல் 14

2096 முதலாவார் மூவரே * அம்மூவர் உள்ளும்
முதலாவான் * மூரி நீர் வண்ணன் ** - முதலாய
நல்லான் அருள் அல்லால் * நாம நீர் வையகத்து *
பல்லார் அருளும் பழுது 15

2097 பழுதே பலபகலும் * போயின என்று * அஞ்சி
அழுதேன் * அரவணை மேல் கண்டு - தொழுதேன் **
கடலோதம் கால் அலைப்பக் * கண் வளரும் * செங்கண்
அடலோத வண்ணர் அடி 16

2098 அடியும் படி கடப்பத் * தோள் திசை மேல் செல்ல *
முடியும் விசும்பு அளந்தது என்பர் ** - வடி உகிரால்
ஈர்ந்தான் * இரணியனது ஆகம் * இருஞ்சிறைப் புள்
ஊர்ந்தான் உலகளந்த நான்று 17

2099 நான்ற முலைத் தலை நஞ்சுண்டு * உறி வெண்ணெய்
தோன்ற உண்டான் * வென்றி சூழ் களிற்றை - ஊன்றி **
பொருதுடைவு[4] கண்டானும் * புள்ளின்[5] வாய் கீண்டானும் *
மருதிடை போய் மண்ணளந்த மால் 18

2100 மாலும் கருங்கடலே! * என் நோற்றாய்? * வையகம் உண்டு
ஆலினிலைத் துயின்ற ஆழியான் ** - கோலக்
கரு மேனிச் * செங்கண் மால் கண் படையுள் * என்றும்
திருமேனி நீ தீண்டப் பெற்று 19

2101 பெற்றார் தளை கழலப் * பேர்ந்து[6] ஓர் குறள் உருவாய் *
செற்றார் படி கடந்த செங்கண் மால் ** - நற்றா
மரை மலர்ச் சேவடியை * வானவர் கை கூப்பி *
நிரை மலர் கொண்டு * ஏத்துவரால்[7] நின்று 20

2102 நின்று நிலம் அங்கை * நீர் ஏற்று மூவடியால் *
சென்று திசை அளந்த செங்கண்மாற்கு ** - என்றும்
படை ஆழி புள்ளூர்தி * பாம்பணையான் பாதம் *

[4] பொருதிடைவு
[5] புள்
[6] பிறந்து
[7] ஏத்துவாராம்

அடை ஆழி நெஞ்சே! அறி 21

2103 அறியும் உலகெல்லாம் * யானேயும் அல்லேன் *
பொறிகொள் சிறை உவணம் ஊர்ந்தாய் ** - வெறி கமழும்
காம்பேய் மெந்தோளி * கடை வெண்ணெய் உண்டாயை *
தாம்பே கொண்டு ஆர்த்த தழும்பு 22

2104 தழும்பிருந்த சார்ங்க நாண் * தோய்ந்தவாம் அங்கை *
தழும்பிருந்த தாள் சகடம் சாடி ** - தழும்பிருந்த
பூங்கோதையாள் வெருவப் * பொன்பெயரோன் மார்பு இடந்த *
வீங்கோத வண்ணர் விரல் 23

2105 விரலோடு வாய் தோய்ந்த * வெண்ணெய் கண்டு * ஆய்ச்சி
உரலோடு உறப் பிணித்த நான்று ** - குரல் ஓவாது
ஏங்கி நினைந்து * அயலார் காண இருந்திலையே? *
ஓங்கோத வண்ணா! உரை 24

2106 உரை மேல் கொண்டு * என் உள்ளம் ஓவாது * எப்போதும்
வரை மேல் * மரதகமே போல ** - திரை மேல்
கிடந்தானைக் * கீண்டானை * கேழலாய்ப் பூமி
இடந்தானை ஏத்தி எழும் 25

2107 எழுவார் விடை கொள்வார் * ஈன் துழாயானை *
வழுவா வகை நினைந்து வைகல் - தொழுவார் **
வினைச் சுடரை நந்துவிக்கும் * வேங்கடமே * வானோர்
மனச் சுடரைத் தூண்டும் மலை 26

2108 மலையால் குடை கவித்து * மாவாய் பிளந்து *
சிலையால் மராமரம் ஏழ் செற்று ** - கொலை யானைப்
போர்க்கோடு ஒசித்தனவும் * பூங்குருந்தம் சாய்த்தனவும் *
கார்க்கோடு பற்றியான் கை 27

2109 கைய வலம்புரியும் நேமியும் * கார்வண்ணத்து
ஐய! * மலர்மகள் நின் ஆகத்தாள் ** - செய்ய
மறையான் நின் உந்தியான் * மாமதிள் மூன்றெய்த *
இறையான் நின் ஆகத்து இறை 28

2110 இறையும் நிலனும் * இருவிசும்பும் காற்றும் *
அறை புனலும் செந்தீயும் ஆவான் ** - பிறை மருப்பின்
பைங்கண் மால் யானை * படு துயரம் காத்து அளித்த *
செங்கண் மால் கண்டாய் தெளி 29

2111 தெளிதாக * உள்ளத்தைச் செந்நிறீஇ * ஞானத்

தெளிதாக * நன்குணர்வார் சிந்தை ** - எளிதாகத்
தாய் நாடு கன்றே போல் * தண் துழாயான் அடிக்கே[8] *
போய் நாடிக் கொள்ளும் புரிந்து 30

2112 புரி ஒரு கை பற்றி * ஓர் பொன் ஆழி ஏந்தி *
அரி உருவும் ஆள் உருவுமாகி ** - எரி உருவ
வண்ணத்தான் மார்பிடந்த * மால் அடியை அல்லால் * மற்று
எண்ணத் தான் ஆமோ? இமை 31

2113 இமையாத கண்ணால் * இருள் அகல நோக்கி *
அமையாப் பொறி புலன்கள் ஐந்தும் - நமையாமல் **
ஆகத்து அணைப்பார் * அணைவரே * ஆயிர வாய்
நாகத்தணையான் நகர் 32

2114 நகரம் அருள் புரிந்து * நான்முகற்குப் பூ மேல் *
பகர மறை பயந்த பண்பன் ** - பெயரினையே
புந்தியால் சிந்தியாது * ஓதி உரு எண்ணும் *
அந்தியாலாம் பயன் அங்கென்? 33

2115 என் ஒருவர் மெய் என்பர் * ஏழ் உலகுண்டு * ஆலிலையில்
முன் ஒருவனாய முகில்வண்ணா! ** - நின்னுருகிப்
பேய்த் தாய் முலை தந்தாள் * பேர்ந்திலளால் * பேர் அமர்க்கண்
ஆய்த் தாய் முலை தந்தவாறு! 34

2116 ஆறிய அன்பில் * அடியார் தம் ஆர்வத்தால் *
கூறிய குற்றமாக் கொள்ளல் நீ - தேறி **
நெடியோய்! அடி * அடைதற்கன்றே * ஈரைந்து
முடியான் படைத்த முரண் 35

2117 முரணை[9] வலி * தொலைதற்கு ஆமென்றே[10] * முன்னம்
தரணி தனதாகத் தானே ** - இரணியனைப்
புண் நிரந்த வள்ளுகிரால் * பொன்னாழிக் கையால் * நீ
மண் இரந்து கொண்ட வகை 36

2118 வகையறு நுண்கேள்வி * வாய்வார்கள் * நாளும்
புகை விளக்கும் பூம்புனலும் ஏந்தி ** - திசை திசையின்
வேதியர்கள் * சென்று இறைஞ்சும் வேங்கடமே * வெண்சங்கம்
ஊதிய வாய் மால் உகந்த ஊர் 37

---

[8] அடியே
[9] முரண
[10] ஆமன்றே

2119 ஊரும் வரி அரவம் * ஒண் குறவர் மால் யானை *
பேர எறிந்த பெருமணியை ** - கார் உடைய
மின் என்று * புற்றடையும் வேங்கடமே * மேல சுரர்
எம்மெனு[11] மாலதிடம் 38

2120 இடந்தது பூமி * எடுத்தது குன்றம் *
கடந்தது கஞ்சனை முன் அஞ்ச ** - கிடந்ததுவும்
நீரோத மாகடலே * நின்றதுவும் வேங்கடமே *
பேரோத வண்ணர் பெரிது 39

2121 பெருவில் பகழிக் * குறவர் கைச் செந்தீ *
வெருவிப் புனம் துறந்த வேழம் ** - இருவிசும்பில்
மீன் வீழக் * கண்டஞ்சும் வேங்கடமே * மேல் அசுரர்
கோன் வீழக் கண்டு உகந்தான் குன்று 40

2122 குன்றனைய குற்றம் செயினும் * குணம் கொள்ளும் *
இன்று முதலாக என் நெஞ்சே! ** - என்றும்
புறன் உரையே ஆயினும் * பொன்னாழிக் கையான் *
திறன் உரையே சிந்தித்திரு 41

2123 திருமகளும் மண்மகளும் * ஆய்மகளும் சேர்ந்தால் *
திருமகட்கே தீர்ந்தவாறு என் கொல்? ** - திருமகள்[12] மேல்
பாலோதம் சிந்தப் * படநாகணைக் கிடந்த *
மாலோத வண்ணர் மனம் 42

2124 மன மாசு தீரும் * அறுவினையும் சாரா *
தனமாய தானே[13] கைகூடும் ** - புனமேய
பூந்துழாயான் அடிக்கே * போதொடு நீர் ஏந்தி *
தாம் தொழா நிற்பார் தமர் 43

2125 தமர் உகந்தது எவ்வுருவம் * அவ்வுருவம் தானே *
தமர் உகந்தது எப்பேர் மற்றப்பேர் ** - தமர் உகந்து
எவ்வண்ணம் சிந்தித்து * இமையாது இருப்பரே *
அவ்வண்ணம் ஆழியானாம் 44

2126 ஆமே அமரர்க்கு * அறிய? அது நிற்க *
நாமே அறிகிற்போம் நல்நெஞ்சே! ** - பூமேய
மாதவத்தோன் தாள் பணிந்த * வாள் அரக்கன் நீள்முடியை *
பாதமத்தால் எண்ணினான் பண்பு 45

[11] எம்மென்ற / என்னென்ற / என்னென்னும்
[12] திருமுக
[13] தாமே

2127 பண் புரிந்த நான்மறையோன் * சென்னிப் பலி ஏற்ற *
வெண்புரிநூல் மார்பன் வினை தீர ** - புண் புரிந்த
ஆகத்தான் * தாள் பணிவார் கண்டீர் * அமரர் தம்
போகத்தால்[14] பூமி ஆள்வார் 46

2128 வாரி சுருக்கி * மதக் களிறு ஐந்தினையும் *
சேரி திரியாமல் செந்நிறீஇ ** - கூரிய
மெய்ஞ்ஞானத்தால் * உணர்வார் காண்பரே * மேலொரு நாள்
கைந்நாகம் காத்தான் கழல் 47

2129 கழல் ஒன்று எடுத்து * ஒரு கை சுற்றி ஓர் கை மேல் *
சுழலும் சுராசுரர்கள் அஞ்ச ** - அழலும்
செருவாழி ஏந்தினான் * சேவடிக்கே செல்ல *
மருவாழி நெஞ்சே! மகிழ்[15] 48

2130 மகிழ் அலகொன்றே போல் * மாறும் பல்யாக்கை *
நெகிழ முயல்கிற்பார்க்கு அல்லால் ** - முகிழ் விரிந்த
சோதி போல் தோன்றும் * சுடர் பொன் நெடுமுடி * எம்
ஆதி காண்பார்க்கும் அரிது 49

2131 அரிய புலன் ஐந்தடக்கி * ஆய்மலர் கொண்டு * ஆர்வம்
புரியப்[16] பரிசினால் புல்கில் ** - பெரியனாய்
மாற்றாது வீற்றிருந்த * மாவலி பால் * வண்கை நீர்
ஏற்றானைக் காண்பது எளிது 50

2132 எளிதில் இரண்டடியும் காண்பதற்கு * என் உள்ளம்
தெளியத் * தெளிந்தொழியும் செவ்வே ** - களியில்
பொருந்தாதவனைப் * பொரல் உற்று * அரியாய்
இருந்தான் திருநாமம் எண் 51

2133 எண்மர் பதினொருவர் * ஈராறுவர் ஓரிருவர் *
வண்ண மலர் ஏந்தி வைகலும் ** - நண்ணி
ஒரு மாலையால் * பரவி ஓவாது * எப்போதும்
திருமாலைக் கை தொழுவர் சென்று 52

2134 * சென்றால் குடையாம் * இருந்தால் சிங்காசனமாம் *
நின்றால் மரவடியாம் நீள் கடலுள் ** - என்றும்
புணையாம் மணிவிளக்காம் * பூம்பட்டாம் புல்கும்
அணையாம் * திருமாற்கு அரவு 53

[14] போகத்தார்
[15] மகிழ்ந்து
[16] புரிந்த

2135 அரவம் அடல் வேழம் * ஆன் குருந்தம் புள் வாய் *
குரவை குடமுலை மற்குன்றம் ** - கரவின்றி
விட்டிறுத்து மேய்த்தொசித்துக் * கீண்டு கோத்தாடி * உண்டு
அட்டெடுத்த செங்கண் அவன் 54

2136 அவன் தமர் * எவ்வினையராகிலும் * எங்கோன்
அவன் தமரே * என்றொழிவது அல்லால் ** - நமன் தமரால்
ஆராயப்பட்டு * அறியார் கண்டீர் * அரவணை மேல்
பேராயற்கு ஆட்பட்டார் பேர் 55

2137 பேரே வரப் * பிதற்றல் அல்லால் எம் பெம்மானை *
ஆரே அறிவார்? அது நிற்க ** - நேரே
கடிக் கமலத்து உள் இருந்தும் * காண்கிலான் * கண்ணன்
அடிக் கமலம் தன்னை அயன் 56

2138 அயல் நின்ற வல்வினையை * அஞ்சினேன் அஞ்சி *
உய நின் திருவடியே சேர்வான் ** - நயம் நின்ற
நன்மாலை கொண்டு * நமோ நாரணா என்னும் *
சொல் மாலை கற்றேன் தொழுது 57

2139 தொழுது மலர் கொண்டு * தூபம் கை ஏந்தி *
எழுதும் எழுவாழி நெஞ்சே! ** - பழுதின்றி
மந்திரங்கள் கற்பனவும் * மால் அடியே கை தொழுவான் *
அந்தரம் ஒன்றில்லை அடை 58

2140 அடைந்த அருவினையோடு * அல்லல் நோய் பாவம் *
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில் ** - நுடங்கிடையை
முன் இலங்கை வைத்தான் * முரண் அழிய * முன்னொரு நாள்
தன் வில் அங்கை வைத்தான் சரண் 59

2141 சரணா மறை பயந்த * தாமரையானோடு *
மரணாய மன்னுயிர்கட்கு எல்லாம் ** - அரணாய
பேராழி கொண்ட * பிரான் அன்றி மற்றறியாது *
ஓராழி சூழ்ந்த உலகு 60

2142 உலகும் உலகிறந்த ஊழியும் * ஒண்கேழ்
விலகு * கருங்கடலும் வெற்பும் ** - உலகினில்
செந்தீயும் * மாருதமும் வானும் * திருமால் தன்
புந்தியிலாய புணர்ப்பு 61

2143 புணர் மருதினூடு போய்ப் * பூங்குருந்தம் சாய்த்து *
மணம் மருவ மால் விடை ஏழ் செற்று ** - கணம் வெருவ
ஏழுலகும் தாயினவும் * எண்திசையும் போயினவும் *

சூழ் அரவப் பொங்கணையான் தோள் 62

2144 தோள் அவனை அல்லால் தொழா * என் செவி இரண்டும் *
கேள் அவனது இன்மொழியே கேட்டிருக்கும் ** - நா நாளும்
கோள் நாகணையான் * குரைகழலே கூறுவதே *
நாணாமை நள்ளேன் நயம் 63

2145 நயவேன் பிறர் பொருளை * நள்ளேன் கீழாரோடு *
உயவேன் உயர்ந்தவரோடு அல்லால் ** - வியவேன்
திருமாலை அல்லது * தெய்வம் என்று ஏத்தேன் *
வருமாறு என் நம்[17] மேல் வினை? 64

2146 வினையால் அடர்ப்படார் * வெந்நரகில் சேரார் *
தினையேனும் தீக்கதிக்கண் செல்லார் ** - நினைதற்கு
அரியானைச் * சேயானை * ஆயிரம் பேர்ச் செங்கண்
கரியானைக் கை தொழுதக்கால் 65

2147 காலை எழுந்து * உலகம் கற்பனவும் * கற்றுணர்ந்த
மேலைத் தலை மறையோர் வேட்பனவும் ** - வேலைக்கண்
ஓராழியான் அடியே * ஓதுவதும் ஓர்ப்பனவும் *
பேராழி கொண்டான் பெயர் 66

2148 பெயரும் கருங்கடலே * நோக்கும் ஆறு * ஒண்பூ
உயரும் * கதிரவனே நோக்கும் ** -உயிரும்
தருமனையே நோக்கும் * ஒண் தாமரையாள் கேள்வன் *
ஒருவனையே நோக்கும் உணர்வு 67

2149 உணர்வாரார் உன் பெருமை? * ஊழி தோறூழி *
உணர்வாரார் உன் உருவம் தன்னை? ** - உணர்வாரார்
விண்ணகத்தாய்! மண்ணகத்தாய்! * வேங்கடத்தாய்! * நால்வேதப்
பண்ணகத்தாய்! நீ கிடந்த பால்? 68

2150 பாலன் தனது உருவாய் * ஏழுலகுண்டு * ஆலிலையின்
மேல் அன்று நீ வளர்ந்த மெய் என்பர் ** - ஆல் அன்று
வேலை நீர் உள்ளதோ? * விண்ணதோ? மண்ணதோ? *
சோலை சூழ் குன்றெடுத்தாய்! சொல்லு[18] 69

2151 சொல்லுந்தனையும் தொழுமின் விழுமுடம்பு *
செல்லுந்தனையும் திருமாலை ** - நல்லிதழ்த்
தாமத்தால் வேள்வியால் * தந்திரத்தால் மந்திரத்தால் *

[17] என்னென்
[18] சொல்

நாமத்தால் ஏத்துதிரேல் நன்று 70

2152 நன்று பிணி மூப்புக் * கையகற்றி நான்கு ஊழி *
நின்று நிலமுழுதும் ஆண்டாலும் ** - என்றும்
விடல் ஆழி நெஞ்சமே! * வேண்டினேன் கண்டாய் *
அடல் ஆழி கொண்டான் மாட்டு அன்பு 71

2153 அன்பு ஆழியானை * அணுகென்னும் நா அவன் தன் *
பண்பாழித் தோள் பரவி ஏத்தென்னும் ** - முன்பு ஊழி
காணானைக் காண் என்னும் கண் * செவி கேள் என்னும் *
பூணாரம் பூண்டான் புகழ் 72

2154 புகழ்வாய் பழிப்பாய் * நீ பூந்துழாயானை *
இகழ்வாய் கருதுவாய் நெஞ்சே![19] ** - திகழ் நீர்க்
கடலும் மலையும் * இருவிசும்பும் காற்றும் *
உடலும் உயிரும் ஏற்றான் 73

2155 ஏற்றான் புள் ஊர்ந்தான் * எயில் எரித்தான் மார்விடந்தான் *
நீற்றான் நிழல் மணிவண்ணத்தான் ** - கூற்றொரு பால்
மங்கையான் * பூமகளான் வார்சடையான் * நீள்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு 74

2156 காப்பு உன்னை உன்னக் கழியும் * அருவினைகள்
ஆப்பு உன்னை உன்ன அவிழ்ந்தொழியும் ** - மூப்பு உன்னைச்
சிந்திப்பார்க்கு இல்லை * திருமாலே! * நின் அடியை
வந்திப்பார் காண்பர் வழி 75

2157 வழி நின்று * நின்னைத் தொழுவார் * வழுவா
மொழி நின்ற * மூர்த்தியரே ஆவர் ** - பழுதொன்றும்
வாராத வண்ணமே விண் கொடுக்கும் * மண் அளந்த
சீரான் திருவேங்கடம் 76

2158 வேங்கடமும் * விண்ணகரும் வெஃகாவும் * அஃகாத
பூங்கிடங்கின் * நீள்கோவல் பொன்னகரும் ** - நான்கு இடத்தும்
நின்றான் இருந்தான் * கிடந்தான் நடந்தானே *
என்றால் கெடுமாம் இடர் 77

2159 இடர் ஆர் படுவார்? * எழு நெஞ்சே * வேழம்
தொடர் வான் * கொடு முதலை சூழ்ந்த ** - படம் உடைய
பைந்நாகப் பள்ளியான் * பாதமே கை தொழுதும் *
கொய்ந்நாகப் பூம்போது கொண்டு 78

[19] என் நெஞ்சே

2160 கொண்டானை அல்லால் * கொடுத்தாரை யார் பழிப்பார்? *
மண் தா என இரந்து மாவலியை ** - ஒண் தாரை
நீர் அங்கை தோய * நிமிர்ந்திலையே? * நீள்விசும்பில்
ஆர் அங்கை தோய அடுத்து 79

2161 அடுத்த கடும் பகைஞற்கு * ஆற்றேன் என்றோடி *
படுத்த பெரும் பாழி சூழ்ந்த - விடத்தரவை **
வல்லாளன் கைக்கொடுத்த * மாமேனி மாயவனுக்கு *
அல்லாதும் ஆவரோ ஆள்? 80

2162 ஆளமர் வென்றி * அடுகளத்துள் அஞ்ஞான்று *
வாளமர் வேண்டி வரை நட்டு ** - நீள் அரவைச்
சுற்றிக் கடைந்தான் * பெயர் அன்றே? * தொல் நரகைப்
பற்றிக் கடத்தும் படை 81

2163 படையாரும் வாட்கண்ணார் * பாரசி நாள் * பைம்பூந்
தொடையலோடு * ஏந்திய தூபம் ** - இடை இடையில்
மீன் மாய * மாசூணும் வேங்கடமே * மேலொரு நாள்
மான் மாய எய்தான் வரை 82

2164 வரை குடை தோள் காம்பாக * ஆநிரை காத்து * ஆயர்
நிரை விடை ஏழ் செற்றவாறு என்னே! ** - உரவுடைய
நீராழியுள் கிடந்து * நேரா நிசாசரர் மேல் *
பேராழி கொண்ட பிரான்! 83

2165 பிரான்! உன் பெருமை * பிறர் ஆர் அறிவார்? *
உராய் உலகளந்த ஞான்று ** - வராகத்து
எயிற்று அளவு * போதாவாறு என் கொலோ? * எந்தை
அடிக்களவு போந்த படி 84

2166 படி கண்டறிதியே? * பாம்பணையினான் * புள்
கொடி கண்டறிதியே? கூறாய் ** - வடிவிற்
பொறி ஐந்தும் உள் அடக்கிப் * போதொடு நீர் ஏந்தி *
நெறி நின்ற நெஞ்சமே! நீ 85

2167 நீயும் திருமகளும் நின்றாயால் * குன்றெடுத்துப்
பாயும் * பனி மறுத்த[20] பண்பாளா ** - வாசல்[21]
கடைகழியா உள் புகாக் * காமர் பூங்கோவல் *
இடைகழியே பற்றி இனி 86

[20] மறைத்த
[21] வாயில்

2168 இனியார் புகுவார் * எழு நரக வாசல்? *
முனியாது மூரித்தாள் கோமின் ** - கனி சாயக்
கன்று எறிந்த தோளான் * கனை கழலே காண்பதற்கு *
நன்கறிந்த நாவலஞ்சூழ் நாடு 87

2169 நாடிலும் * நின் அடியே நாடுவன் * நாள் தோறும்
பாடிலும் * நின் புகழே பாடுவன் ** - சூடிலும்
பொன்னாழி ஏந்தினான் * பொன்னடியே சூடுவேற்கு *
என்னாகில் என்னே எனக்கு? 88

2170 எனக்காவார் * ஆர் ஒருவரே! * எம்பெருமான்
தனக்காவான் * தானே மற்றல்லால் ** - புனக்காயாம்
பூமேனி காணப் * பொதி அவிழும் பூவைப் பூ *
மாமேனி காட்டும் வரம் 89

2171 வரத்தால் வலி நினைந்து * மாதவ! நின் பாதம் *
சிரத்தால் வணங்கானாம் என்றே?[22] ** - உரத்தினால்
ஈரரியாய் * நேர் வலியோனாய இரணியனை *
ஓரரியாய் நீ இடந்தது ஊன் 90

2172 ஊனக்குரம்பையின் * உள் புக்கு இருள் நீக்கி *
ஞானச் சுடர்கொளீஇ நாள் தோறும் ** - ஏனத்து
உருவாய் உலகிடந்த * ஊழியான் பாதம் *
மருவாதார்க்கு உண்டாமோ வான்? 91

2173 வானாகித் தீயாய் * மறிகடலாய் மாருதமாய் *
தேனாகிப் பாலாம் திருமாலே! ** - ஆனாய்ச்சி
வெண்ணெய் விழுங்க * நிறையுமே * முன்னொரு நாள்
மண்ணை உமிழ்ந்த வயிறு 92

2174 வயிறழல வாளுருவி * வந்தானை அஞ்ச *
எயிறிலக வாய் மடித்ததென் நீ? ** - பொறி உகிரால்
பூவடிவை ஈடழித்த * பொன்னாழிக் கையா! * நின்
சேவடி மேல் ஈடழியச் செற்று 93

2175 செற்றெழுந்து தீவிழித்துச் * சென்ற இந்த ஏழுலகும் *
மற்றிவை ஆவென்று[23] வாய் அங்காந்து ** - முற்றும்
மறையவற்குக்[24] காட்டிய * மாயவனை அல்லால் *
இறையேனும் ஏத்தாது என் நா 94

[22] என்னே!
[23] ஆமென்று
[24] மறையவர்க்கு

2176 நா வாயில் உண்டே * நமோ நாரணா என்று *
ஓவாது உரைக்கும் உரை உண்டே ** - மூவாத
மாக்கதிக்கண் செல்லும் * வகை உண்டே * என் ஒருவர்
தீக்கதிக்கண் செல்லும் திறம்? 95

2177 திறம்பாது என் நெஞ்சமே! * செங்கண் மால் கண்டாய் *
அறம் பாவம் என்று இரண்டும் ஆவான் ** - புறம் தான் இம்
மண் தான் * மறிகடல் தான் மாருதம் தான் * வான் தானே
கண்டாய் கடைக்கட்பிடி 96

2178 பிடி சேர் * களிறளித்த பேராளா! * உன்தன்
அடி சேர்ந்து அருள் பெற்றாள் அன்றே ** - பொடி சேர்
அனற்கு அங்கை ஏற்றான் * அவிர்சடை மேல் பாய்ந்த *
புனற்கங்கை என்னும் பேர்ப்பொன் 97

2179 பொன் திகழு மேனிப் * புரிசடை அம்புண்ணியனும் *
நின்றுலகம் தாய நெடுமாலும் ** - என்றும்
இருவரங்கத்தால் * திரிவரேலும் * ஒருவன்
ஒருவன் அங்கத்து என்றும் உளன் 98

2180 * உளன் கண்டாய் நன்னெஞ்சே! * உத்தமன் என்றும்
உளன் கண்டாய் * உள்ளுவார் உள்ளத்து - உளன் கண்டாய் **
வெள்ளத்தின் உள்ளானும் * வேங்கடத்து மேயானும் *
உள்ளத்தின் உள்ளான் என்று ஓர் 99

2181 * ஓரடியும் சாடுதைத்த * ஒண்மலர்ச் சேவடியும் *
ஈரடியும் காணலாம் என் நெஞ்சே! ** - ஓரடியின்
தாயவனைக் கேசவனைத் * தண்துழாய் மாலை சேர் *
மாயவனையே மனத்து வை 100

**தசக அடிவரவு:** வையம் வாய் நின்று புரி குன்று எளிதில் உலகும் நன்று
ஆள் ஊன் அன்பு

---

**பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்**